


புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ மே. 23, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 228 ❖ ரூ.10

### “திராவிட மாடல் ஆட்சியில் ஊழல் கொடிகட்டி பறக்கிறது”

# ஆளுநரிடம் புகார்

## வேங்கைவயல் சம்பவத்தில் இதுவரை குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியவில்லை. ரவுடிகளும், குற்றவாளிகளும் காவல் துறையைக் கண்டு பயப்படுவது இல்லை; எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி



**சென்னை , மே. 23-**

**திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஆளுநர் ஆர்.என். ரவியிடம் புகார் மனு அளித்த எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, “திராவிட மாடல் ஆட்சியில் ஊழல் கொடிகட்டி பறக்கிறது” என்று குற்றம்சாட்டினார்.**



சென்னையில் அதிமுக சார்பில் பேரணியாக சென்று ஆளுநர் ஆர். என்.ரவியிடம் திமுக ஆட்சி குறித்து அதிமுக பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி நேற்று புகார் மனு அளித்தார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்,"இரண்டு ஆண்டு கால ஆட்சியில் நடைபெற்றுள்ள ஊழல் குறித்தும், சட்டம் - ஒழுங்குசீர்கேடு குறித்தும், பல்வேறு புகார் குறித்தும் ஆளுநரிடம் புகார் மனு அளித்துள்ளோம். நாங்கள் அளித்த புகாரை பரிசீலனை செய்வதாக ஆளுநர் கூறியுள்ளார்.

திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு ஊழல்கள் கொடிகட்டி பறக்கின்றன. இது தொடர்பாக ஆளுநரிடம் ஆதாரத்துடன் கூறியுள்ளோம். தமிழகத்தில் அன்றாடம் நிகழும் நிகழ்வுகள் குறித்தும், மக்கள் படும் அவதிகள் குறித்தும் முழுமையாக ஆளுநரிடம் தெரிவித்து இருக்கிறோம். திமுக அரசின் ஊழல் மற்றும் முறைகேடுகள் என்ற தலைப்பில்துறைரீதியான ஊழல் குற்றச்சாட்டு, சட்டம் - ஒழுங்கு சீர்கேடு மற்றும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அந்த மனுவில் தெளிவாக கூறியுள்ளோம்.

கிராம நிர்வாக அதிகாரியை மணல் கொள்ளையர்கள் படுகொலை செய்கின்றனர். அரசு ஊழியர்களுக்கு இந்த ஆட்சியில் பாதுகாப்பு இல்லை. கள்ளச் சாராய சாவு, போலி மதுபான சாவு நடந்துள்ளது. தஞ்சாவூரில் டாஸ்மாக் பாரில் காலை 11 மணிக்கு விற்கப்பட்ட மதுவை அருந்திய 2 பேர் மரணம் அடைந்துள்ளனர். மரக்காணம், செங்கல்பட்டு சம்பவத்தை தொடர்ந்து அரசு நடவடிக்கை எடுத்து இருந்தால் நேற்று 2 உயிர்கள் பறிபோய் இருக்காது. பொம்மை முதல்வர், திறமையற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் இரண்டு உயிர்களை இழந்து இருக்கிறோம்.

வேங்கைவயல் சம்பவத்தில் இதுவரை குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியவில்லை. இது தொடர்பாக நடவடிக்கையும் எடுக்கவில்லை. ரவுடிகளும், குற்றவாளிகளும் காவல் துறையைக் கண்டு பயப்படுவது இல்லை. எந்த நடவடிக்கையும் எடுக்காத அரசுதான் இந்த அரசு" என்று அவர் கூறினார்.

# ரூ.2,000 நோட்டுகளை பஸ்களில் பயணிகள் மாற்றலாம் : போக்குவரத்துறை

சென்னை , மே. 23-

சென்னை, செப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்கு பிறகு 2,000 ரூபாய் நோட்டு செல்லாது என்ற அதிரடி அறிவிப்பை பாரத ரிசர்வ் வங்கி வெளியிட்டது.

அதன்படி 2,000 ரூபாய் நோட்டு புழக்கத்தில் இருந்து திரும்பப்பெறப் படுவதாகவும் 2,000 ரூபாய் நோட்டுகள் வைத்திருப்போர் அவற்றை வருகிற 23-ந் தேதி செவ்வாய்க்கிழமை முதல் வங்கிகளில் செலுத்தி மாற்றிக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழகத்தில் அரசு பேருந்துகளில் 2 ஆயிரம் நோட்டுகளை வாங்க வேண்டாம் என்று நடத்துனர்களுக்கு போக்குவரத்து கழகம் அறிவுறுத்தி இருந்தநிலையில், அரசு பஸ்களில் பயணிகள் தரும் ரூ 2,000 நோட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் பயணிகள் தவிர வெளிநபர்கள், தனியார் நிறுவனங்கள் ரூ 2,000 நோட்டுகளை மாற்ற அனுமதியில்லை என போக்குவரத்துறை தெரிவித்துள்ளது.

# தென்காசி வடக்கு மாவட்டம் புளியங்குடியில் திமுக புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது

தென்காசி, மே. 23-

தென்காசி வடக்கு மாவட்டம்புளியங்குடியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஆணைக்கிணங்க புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம் புளியங்குடி நகர திமுக அலுவலகத்தில் நகர பொறுப்பாளர், தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி. சீனிவாசன் தலைமையில், நகரச் செயலாளர் எ. அந்தோணிசாமி முன்னிலையில், முன்னாள் முதல்வர் கலைஞரின் நூற்றாண்டு விழாவில் ஒருகோடி புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது.



நிகழ்ச்சியில் அவைத்தலைவர் வேல்சாமி பாண்டியன், மாவட்ட பிரதிநிதி சுரேஷ் தலைமை பொதுக்குழு உறுப்பினர் பத்திர சாகுல், நகர துணை செயலாளர் ஆசைகனி வக்கீல் கார்த்திக் மற்றும் வார்டு திமுக செயலாளர்கள் பிச்சையா, மணிகண்டன், கருப்பசாமி, திருமலை சாமி, ஆறுமுகம், ராஜா வேல்பாண்டியன், பீர்முஹம்மது, முத்துக்குமார், பொண்ணு துரைச்சி, பழனிச்சாமி, பீர்முஹம்மது, ராஜ் மீனா, காஜா மைதீன், சித்ரா செல்வகுமார், டீக்கடை காஜாமைதீன், விக்ரம் மணிகண்டன், மாரி செல்வம், செந்தில் வேல், நாகூர் கனி, மாடசாமி, பாலசுப்பிரமணியம், மீனாட்சி சுந்தரம், முருகன், சக்தி ஐயப்பன், டி. காஜா, குட்லக் நடராஜன், பூமாரி, சுப்பு, ஆறுமுகம், தவமணி, செல்வராஜ், வெள்ளை பாண்டி, முகமது மீரான், குருசாமி பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உலக முதலீட்டாளர்கள் மாநாடு தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு இன்று பயணம்

**சென்னை** , மே. 23-

**புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், உலக முதலீட்டாளர்கள் மாநாடு தொடர்பாகவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு இன்று பயணம் செல்கிறார்.**




இதுதொடர்பாகதமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், " இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைத்திடுவதில் முக்கிய பங்காற்றிடும் விதமாக, 2030-2031 நிதியாண்டிற்குள், தமிழகத்தின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு மேம்படச் செய்வதை ஒரு லட்சிய இலக்காகக் கொண்டு தமிழக அரசு செயலாற்றி வருகிறது.

இந்த இலக்கினை அடைந்திட, ரூ.23 லட்சம் கோடி அளவிற்கு முதலீடுகளை ஈர்த்திடவும், 46 லட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும்வேண்டும். இந்த நோக்கத்திற்காக, தொழில் துறை பல்வேறு முதலீட்டாளர்கள் மாநாடுகளை நடத்தி வருகிறது. இதன் மூலம் ஜூலை 2021 முதல் இதுவரை 226 திட்டங்களுக்கான புரிந்துணர்வுஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, தமிழகத்தில் 2,95,339 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் மற்றும் 4,12,565 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் உறுதியளிக்கப் பட்டுள்ளது. அனைவரையும் உள்ளடக்கிய சமச்சீரான வளர்ச்சியை உறுதி செய்யும் விதமாக, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில், இந்தத் திட்டங்கள் பரவலாக அமைய உள்ளன.

தமிழகத்திற்கு புதிய முதலீடுகளை ஈர்க்கும் வகையில், தமிழ்நாடு நிதி நுட்பக் கொள்கை 2021, தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டு கொள்கை 2021, தமிழ்நாடு உயிர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை 2022, தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை 2022, தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை 2022, தமிழ்நாடு விண்வெளி & பாதுகாப்புத் தொழில் கொள்கை 2022. தமிழ்நாடு எத்தனால் கலவைக் கொள்கை 2023, மற்றும் தொழில் நுட்ப ஜவுளிகள் மற்றும் ஆடைகள் உற்பத்தியை ஊக்குவிக்கும் சிறப்புதிட்டம் போன்ற பல்வேறு துறை சார்ந்த கொள்கைகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

தமிழகத்திற்கு முதலீடுகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை கொண்டு வரவும், வரும் ஜனவரி 2024-இல் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கவும் அரசு முறைப் பயணமாக, சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு முதல்வர் பயணம்மேற்கொள்கிறார்.

முதல்வருடன்,தொழில் துறை அமைச்சர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடன் செல்கிறார்கள். 23.5.2023 அன்று சிங்கப்பூருக்கு புறப்பட்டு சென்று, அந்நாட்டின் போக்குவரத்து தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் ஈஸ்வரன், உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கே.சண்முகம் மற்றும் அந்நாட்டின் முன்னணி தொழில் நிறுவனங்களான டெமாசெக் (Temasek), செம்கார்ப் (Sembcorp) மற்றும் கேப்பிட்டாலாண்டு இன்வஸ்மன்ட் (CaptiaLand Investment) அதிபர்கள் / முதன்மைச் செயல் அலுவலர்களையும் சந்திக்க உள்ளார்கள்.

அன்று மாலை நடைபெற உள்ள முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) பேம்டிஎன் (FameTN), டான்சிம் (TANSIM) மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC)ஆகியவைசிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த பல்கலைக்கழகமான SUTD (Singapore University of Technology & Design), சிங்கப்பூர் இந்தியா கூட்டாண்மை அமைப்பு- SIPO (Singapore India Partnership Office) மற்றும் சிங்கப்பூர் இந்தியா தொழில் வர்த்தக கூட்டமைப்பு- SICCI (Singapore Indian Chamber of Commerce and Industries) ஆகியவற்றுடன் புரிந்துணர்வுஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும் சிங்கப்பூர் வாழ் தமிழர்கள் ஏற்பாடு செய்துள்ள கலைநிகழ்ச்சியிலும் கலந்து கொள்ள உள்ளார்கள்.

முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம், இந்திய அளவில் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாக உள்ளது. அதிலும் குறிப்பாக, ஜப்பானிய முதலீட்டாளர்கள் பெரிதும் விரும்பும் மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது. எண்ணற்ற ஜப்பான் நிறுவனங்கள், தமிழகத்தைத் தேர்ந்தெடுத்து, தங்கள் திட்டங்களை இங்கு நிறுவியுள்ளனர். அண்மையில் உலக அளவில் முன்னணி குளிர்சாதன இயந்திரங்கள் தயாரிப்பு நிறுவனமான மிட்சுபிஷி நிறுவனம் 1891 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது. ஜப்பான் நாட்டின் தலைசிறந்த நிறுவனங்களில் முன்னணியில் இருக்கக்கூடிய நிசான் நிறுவனம், பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ரெனால்ட் நிறுவனத்துடன் இணைந்து சமீபத்தில் 3300 கோடி ரூபாய் தமிழகத்தில் முதலீடு செய்தது மட்டுமல்லாமல் தனது தொழில் நடவடிக்கைகளை நம்மாநிலத்தில் மேலும் விரிவாக்கம் செய்து வருகிறது.

இந்த உறவை மேலும் மேம்படுத்தும் வகையில்தான், முதல்வர், முதலீட்டுக் குழுவுக்கு தலைமை தாங்கி ஜப்பான் செல்கிறார்கள். அங்கு முன்னணி தொழில்துறைத் தலைவர்களையும், அரசு

அதிகாரிகளையும் சந்தித்து, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்று, தமிழகத்தில் முதலீடு மேற்கொள்ள வருமாறு முதல்வர் அழைப்பு விடுக்க இருக்கிறார்கள். ஜப்பான் நாட்டில், ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு மாநாடும் நடைபெற உள்ளது. பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட உள்ளன.

இதுவரை ஜப்பான் சென்றுள்ள அரசுக் குழுக்கள் டோக்கியோ மட்டுமே சென்று வந்துள்ளனர். ஓசாகாவில் இந்திய வம்சாவளியினர் அதிக அளவில் வசித்து வருகின்றனர். இங்கு பல முன்னணி தொழில் நிறுவனங்களும் அமைந்துள்ளன. எனவே, ஓசாகா நகருக்கும் வருகை தரும்படி விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று முதல் முறையாக ஓசாகா நகருக்கு தமிழகத்தின் முதல்வர் தலைமையில் இந்தக் குழு செல்ல உள்ளது.

ஓசாகாவில், ஜப்பான் வெளியுறவு வர்த்தக நிறுவனமான, ஜெட்ரோ (JETRO) நிறுவனத்துடன் இணைந்து அங்கு நடைபெற உள்ள முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் கலந்துகொள்ள உள்ளார்கள். மேலும் முக்கிய நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளுடன் சந்தித்து தமிழகத்தில் முதலீடுகள் மேற்கொள்வதற்கு அழைப்பு விடுக்க உள்ளார்கள். அதனைத் தொடரந்து ஓசாகா வாழ் இந்திய சமூகத்தினர் அளிக்கும் வரவேற்பு நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ள உள்ளார்கள்.

டோக்கியோ நகரில் அந்நாட்டின் பொருளாதாரம் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் நிஷிமுரா யசுதோஷி மற்றும் ஜப்பான் தொழில் நிறுவனமான, ஜெட்ரோ தலைவர் இஷிகுரோ நொரிஹிகோவை முதல்வர் சந்திக்க உள்ளார்கள். மேலும், 200க்கும் மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் கலந்துகொள்ளும் முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் கலந்துகொள்கிறார்கள். கியோகுடோ மற்றும் ஓம்ரான் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளபட உள்ளன. மேலும் அங்குள்ள மேம்பட்ட தொழில் மையத்தை பார்வையிட உள்ளார்கள்.

தமிழகத்திற்கும், ஜப்பானுக்கும் இடையே நீண்ட நெடிய வரலாற்று உறவு இருந்து வருகிறது. இந்த உறவு மேலும் வலுவடையும் வகையில், இந்தஅரசுமுறைப்பயணம் அமைந்திடும்." இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனரின் ஊழியர் விரோத பணியிடை நீக்கத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

புதுக்கோட்டை, மே.23-


தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனரின் ஊழியர் விரோத பணியிடை நீக்கத்தை கண்டித்தும், உடனடியாக பணியிடை நீக்கத்தை ரத்துசெய்ய வலியுறுத்தியும் புதுக்கோட்டை நகராட்சி அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் ஆர்.சரஸ்வதி கடந்த 15.05.2023 ல் புதுக்கோட்டை நகராட்சியில் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வுக்குப் பின் புதுக்கோட்டை நகராட்சி துப்புரவு ஆய்வாளர் கரு. மணிவண்ணன், சுகாதார அலுவலர் பொறுப்பு நா.கணேசன் ஆகிய இருவரையும் பணியிடை நீக்கம் செய்துள்ளார். எந்தவிதமான புகாரும் இல்லாத நிலையில் மேற்படி இருவரையும் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, யாருடையோ தூண்டுதலின் பேரில் பணிநீக்கம் செய்துள்ளதாகவும், தற்காலிக பணிநீக்கத்தை உடனடியாகரத்துசெய்ய வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு நகராட்சி, மாநகராட்சி அலுவலர் சங்கம் சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாநில செயலாளர் கரு. மணிவண்ணன் தலைமை வகித்தார், மாநில பொதுச் செயலாளர் மு.தாமோதரன், பொருளாளர் இரா. சுவாமிநாதன், அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் சே.ஜபருல்லா, செயலாளர் ஆர். ரெங்கசாமி, உள்ளாட்சித்துறை தொழிலாளர் சங்க மாவட்டப் பொதுச் செயலாளர் க.முகமதலிஜின்னா, தோழமைச் சங்க நிர்வாகிகள் கே.குமரேசன், ஆ.மலர்விழி, எஸ். குணசேகரன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவராக மெர்சி ரம்யா பொறுப்பேற்றுக் கொண்டார்



புதுக்கோட்டை, மே.23–

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவராக மெர்சி ரம்யா நேற்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில்

பொறுப்பேற்றுக் கொண்டார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சரால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பு திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து திட்டங்களை நிறைவேற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தின் அடிப்படை வசதிகள், வளர்ச்சிப் பணிகள், உட்கட்டமைப்பு பணிகள் உள்ளிட்ட அனைத்தும் விரைவாகவும்ருபவ் துரிதமாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து பணியாற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் பொதுமக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் விரைவாக நிறைவேற்றிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா தெரிவித்தார்.

நேற்று மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட மெர்சிரம்யா 2015 ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணியில் சேர்ந்தார், 2016 ஆம் ஆண்டு உதவி ஆட்சியராக ஈரோடு மாவட்டத்திலும், 2017–2019 ஆம் ஆண்டில் திண்டிவனம் சார் ஆட்சியராகவும், 2019–2021 ஆம் ஆண்டில் கூடுதல் ஆட்சியராக (வளர்ச்சி) கன்னியாகுமரி மாவட்டத்திலும், 2021–2023 ஆம் ஆண்டில் வணிக வரித்துறையில் இணை ஆணையராகவும் பணியாற்றி உள்ளார், தற்பொழுது புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவராக நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

மேலும் புதிய மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட மெர்சிரம்யா-வுக்கு முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு வாழ்த்து தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்ட அனைத்துத்துறை அலுவலர்களும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவரை சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# அரியலூர் அருந்தவநாயகி உடனுறை ஆலந்துறையார் கோயில் மகாகும்பாபிஷேகம் வருகிற ஜுன் 1–ம் தேதி நடைபெறுகிறது



அரியலூர், மே .23–

அரியலூர் அருந்தவநாயகி உடனுறை ஆலந்துறையார் கோயில் கும்பாபிஷேகம், வருகிற ஜுன் 1-ம் தேதி, வியாழக்கிழமை நடைபெறுகிறது.

அரியலூர் நகரின் மையப் பகுதியில், சுமார் 600 ஆண்டுகளுக்கு முற்பட்ட, அருந்தவநாயகி உடனுறை ஆலந்துறையார் சிவன் கோயில் உள்ளது.

சோழ நாட்டில் காவேரி ஆற்றின் வடகரையில், சமயக்குரவர்கள் நால்வரில் ஒருவரான, திருஞானசம்பந்தரால் தேவாரம்பாடல்பெற்றதலமான கீழப்பழுவூரில் (திருப்பழுவூர்), ஆலந்துறையார் உடனுறை அருந்தவநாயகி கோயில் உள்ளது. அரியலூர் ஜமீன்தார்கள் ஆட்சி காலத்தில் ஸ்ரீ விஜய ஒப்பிலாத மழவராயர், 1808–ம் ஆண்டு இக்கோயிலை சீரமைத்து, கும்பாபிஷேகம் நடத்தியதாக கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. அதன் பிறகு 1986 ஆம் ஆண்டு, அரியலூர் நகர பொதுமக்களால் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து 36 ஆண்டுகள் கழித்து, பக்த பிரமுகர்கள், வணிகர்கள், மற்றும் ஏராளமான பொதுமக்கள் நிதியுதவியுடன், ஓம் நமச்சிவாய திருப்பணி குழு மேற்பார்வையில், சுமார் 3 கோடி ரூபாய் செலவில், இந்த ஆலயம் முழு திருப்பணியுடன், கோயில் நந்தவனம், திருக்குளம் உள்ளிட்டவையும் சீரமைக்கப்பட்டு, மூன்றுநிலை ராஜகோபுரம் உருவாக்கி, பஞ்ச வர்ணங்கள் தீட்டப்பட்டு, மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

வருகிற ஜுன் 1ஆம் தேதி வியாழக்கிழமை, காலை 8 மணிக்கு மேல், 8.52 மணிக்குள், மிதுன லக்னத்தில், அரியலூர் அருந்தவ நாயகி உடனுறை ஆலந்துறையார் கோவில் ராஜகோபுரம், சுவாமி, அம்பாள் விமானம், மற்றும் அனைத்து விமானங்கள், திருக்கோயில் பிரகாரத்தில் உள்ள, சன்னதி பிள்ளையார் உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கும், மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. அதையொட்டி வருகிற 25 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11:00 மணிக்கு, யாகசாலை பூஜைகள் தொடங்கி, 31 ஆம் தேதி வரை, தொடர்ந்து ஏழு நாட்கள் நடைபெறுகிறது. தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகத்தின் கீழ் உள்ள, இக்கோயில் மகா கும்பாபிஷேக பணியில், கோயில் இணை ஆணையர், உதவி ஆணையர், தக்கார், செயல் அலுவலர், மற்றும் திருக்கோயில் பணியாளர்களும் ஈடுபட்டுள்ளனர்.




# பிரபல முன்னணி நடிகர் சரத்பாபு காலமானார்



ஹைதராபாத் , மே.23–

தமிழ், தெலுங்கு, மலையாள மொழிகளில் சுமார் 200 படங்களுக்கு மேல் நடித்த மூத்த நடிகர் சரத்பாபு ஹைதராபாத்தில் உள்ள மருத்துவமனையில் காலமானார். அவருக்கு வயது 71.

நடிகர் சரத்பாபு தமிழில், 'நிழல் நிஜமாகிறது', 'உதிரிப்பூக்கள்', 'நெஞ்சத்தைக் கிள்ளாதே', 'முள்ளும் மலரும்', 'அண்ணாமலை', 'முத்து' உள்ளிட்ட ஏராளமான படங்களில் நடித்துள்ளார். கடந்த சில வாரங்களுக்கு முன்பு சரத்பாபுவுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் பெங்களூருவில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்தார். ஆனால் அவரது உடல்நிலை மேலும் மோசமடைந்ததால், கடந்த ஏப்ரல் மாதம் 20–ஆம் தேதி ஹைதராபாத்தில் உள்ள ஏஐஜி மருத்துவமனைக்கு அவர் மாற்றப்பட்டார். அங்கு அவருக்கு செயற்கை சுவாசக்கருவி பொருத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுவந்தது.

இந்த நிலையில், ஹைதராபாத் மருத்துவமனையில் தொடர் சிகிச்சையிலிருந்த நடிகர் சரத்பாபுவின் உடல்நிலை நேற்று மோசமடைந்த நிலையில் அவர் உயிரிழந்தார். அவருக்கு திரையுலகினரும், ரசிகர்களும் புகழஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

சரத்பாபு திரைப் பயணம்: 1973–ம் ஆண்டு தெலுங்கில் வெளியான 'ராம ராஜ்ஜியம்' படம் மூலமாக திரையுலகில் அறிமுகமானார் சரத்பாபு. 'பட்டினப்பிரவேசம்' படம் மூலமாக தமிழ் திரையுலகில் அடியெடுத்து வைத்தவர், பின்னாட்களில் தமிழ், தெலுங்கு எனமாறிமாறிநடித்து வந்தார். 1979–ல் மகேந்திரன் இயக்கத்தில் வெளியான 'உதிரிப்பூக்கள்' திரைப்படம் அவருக்கு ரசிகர்களிடையே தனி அடையாளத்தை பெற்றுதந்தது. தவிர, 'சரபஞ்சரம்', 'தன்யா' உள்ளிட்ட மலையாள படங்களில் நடித்துள்ளார். இறுதியாக கடந்த பிப்ரவரி மாதம் பாபி சிம்ஹா நடிப்பில் வெளியான 'வசந்த முல்லை' படத்தில் சரத்பாபு நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும், கடந்த 1980–ம் ஆண்டு பி.லெனின் இயக்கத்தில் உருவான 'நதியை தேடி வந்த கடல்' படத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுடன் இணைந்து சரத்பாபு நடித்திருந்தார். இந்தப் படம் ஜெயலலிதா நடித்த கடைசிப் படம் என்பது குறிப்பிடத்தக்கது.

ரஜினியின் முள்ளும் மலரும், அண்ணாமலை, முத்து படங்களில் முக்கியக் கதாபாத்திரத்தில் நடித்த சரத்பாபு, அதன்மூலம் ரஜினி ரசிகர்களின் அன்பையும் பெற்றவர். “திரையில் ரஜினியை சரத்பாபு அறைந்தாலும் ரஜினி ரசிகர்கள் கோபப்பட மாட்டார்கள். அந்த அளவுக்கு அவர் மீது ரஜினி ரசிகர்களுக்கு பாசம் உண்டு” என்று பேட்டி ஒன்றில் ராதாரவி குறிப்பிட்டிருந்தது நினைவுகூரத்தக்கது.

# ஆதனக்கோட்டையில் கராத்தே பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு தகுதி பட்டை வழங்கும் விழா



ஆதனக்கோட்டை, மே.22–

கராத்தே பயிற்சியில் கலந்துகொண்டு சிறப்பாக பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு பட்டை வழங்கும் விழா ஆதனக்கோட்டையில் நடைபெற்றது. அண்டக்குளம், ஆதனக்கோட்டை, பெருங்களூர் ஆகிய கிராமங்களில் உள்ள கராத்தே மையங்களில் கராத்தே, சிலம்பம், வேல்கம்பு, வால்வீச்சு போன்ற கலைகளில் தேர்ச்சி பெற்றோர்களை வைத்து நடத்தப்படும் கராத்தே பயிற்சியில் ஐந்து வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றவர்களில் சிறந்த மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு தகுதி அடிப்படையில் மஞ்சள் பட்டை, பச்சை பட்டை, ஆரஞ்சு பட்டை, ஊதாபட்டை, அரக்குபட்டை, கருப்பு பட்டை உள்ளிட்ட பட்டைகளை பெற்ற மாணவர்களுக்கு முதுநிலைப் கராத்தே பயிற்றுநர் பாலசுப்ரமணியன் கலந்துகொண்டு பட்டைகளை வழங்கினார்.

மாணவர்கள் குரு வணக்கம் செலுத்தி பட்டையை பெற்றுக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு தர அடிப்படையில் பட்டையை பெற்றுக் கொண்டனர், மாணவர்களின் பெற்றோர்கள் கலந்துகொண்டு தங்களது பிள்ளைகள் பட்டைகள் பெறுவதையும் கராத்தே, சிலம்பம், வேல்கம்பு ,வால்வீச்சு போன்ற கலைகளை செய்து காண்பித்ததையும் கண்டு மகிழ்ச்சி அடைந்தனர். இந்த நிகழ்ச்சியில் புதுக்கோட்டை தலைமை பயிற்சியாளர் சண்முகம், முத்து, ஆதனக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் கண்ணன், பெருங்களூர் ஊராட்சி மன்றத் தலைவர் சரண்யாஜெய்சங்கர், குப்பையன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் கவிதாமலையாண்டி, வாராப்பூர் ,ஊராட்சி மன்றத் தலைவர் சதீஷ்குமார், ஒன்றிய கவுன்சிலர், முத்துலட்சுமி, சாமியய்யா விடுதலை சிறுத்தைகள் கட்சி பொறுப்பாளர் ,பெரியசாமி, காங்கிரஸ் கட்சியின் பொருப்பாளர், தமிழ்வாணன், ஆதனக்கோட்டை சுற்றுவட்டார பொதுமக்கள், இளைஞர்கள் ,திரளானோர் கலந்து கொண்டனர்.

# ஆவுடையார்கோவில் குறிச்சிக்குளம் முத்துமாரி அம்மன்கோயில் வைகாசி திருவிழாவை முன்னிட்டு பூச்சொரிதழ் விழா



ஆவுடையார்கோவில், மே.23–

ஆவுடையார்கோவில் குறிச்சிக்குளம் பிரசித்திபெற்ற முத்துமாரி அம்மன்கோயில் உள்ளது. இந்த கோயில் வைகாசி திருவிழாவை முன்னிட்டு முத்துமாரி அம்மனுக்கு பூச்சொரிதழ் விழா நடைபெற்றது, விழாவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து ஒன்றியக்குழுத் தலைவர் உமாதேவி தலைமையிலும், ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் பிரியா குப்புராஜா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சீனிவாசன், தமிழ்செல்வன், முன்னிலையில் ஒன்றியக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், மற்றும் ஒன்றிய அலுவலர்கள் கலந்துகொண்டு பூக்களை அலங்கரிக்க வாகனத்தில் முத்துமாரிஅம்மன்கோயிலுக்கு கொண்டுசென்றனர், இதேபோல் வருவாய்த்துறை அலுவலகத்திலிருந்து தாசில்தார் மார்ட்டின் லூதர் கிங் தலைமையில் பூக்களை கோவிலுக்கு கொண்டு சென்றனர்.

தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்தும், நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்திலிருந்தும், போலீஸ் நிலையத்திலிருந்தும், ஆட்டோ சங்கத்தினர்களும், வேன் ஓட்டுநர் சங்கத்திலிருந்தும் மற்றும் பல்வேறு அலுவலகத்திலிருந்தும் பூக்களை கோயிலுக்கு கொண்டு சென்றனர், இதேபோல் ஆவுடையார்கோவில் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து ஏராளமானோர் வாகனங்களிலும், ஏராளமான பெண்கள்பூக்களை தலையில் எடுத்துக்கொண்டு நான்கு வீதிகளிலும் சுற்றி வந்து அம்மனுக்கு செலுத்தி அம்மனை வழிப்பட்டு சென்றார்கள், பல்வேறு இடங்களில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

# சென்னையில் போக்குவரத்து மாற்றம் சிறந்த மாற்று வழிகளை கண்டறிய மென்பொருளை பயன்படுத்த திட்டம்

சென்னை , மே.23–

சென்னையில் போக்குவரத்து மாற்றத்தை திட்டமிட மென்பொருளை பயன்படுத்த சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் முடிவு செய்துள்ளது.

சென்னையில் பல்வேறு பணிகளுக்காக அடிக்கடி போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது. குறிப்பாக மெட்ரோ ரயில் பணிகள், மழை நீர் வடிகால் உள்ளிட்ட பணிகளுக்காக அடிக்கடி போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது. இதன் காரணமாக பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே இதற்கு மென்பொருள் மூலம் தீர்வு காண சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் திட்டமிட்டுள்ளது.

இதன்படி 2 மென் பொருள்களை வாங்க சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் முடிவு செய்துள்ளது. இதன்படி, visum மற்றும் vissim என்ற மென் பொருள்களை வாங்க உள்ளது. இந்த மென் பொருள்கள் போக்குவரத்து சார்ந்த திட்டமிடலுக்கு பயன்படுத்தும் மென் பொருள்கள் ஆகும். முதல் கட்டமாக ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் அதிகாரிகளுக்கு இது தொடர்பாக பயிற்சி அளிக்கப்படும். இதனைத் தொடர்ந்து மெட்ரோ ரயில், போக்குவரத்து காவல் துறை, நெடுஞ்சாலைத்துறை, சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அதிகாரிகளுக்கு இது தொடர்பாக பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக அதிகாரிகள் கூறுகையில், "போக்குவரத்து மாற்றம் செய்ய திட்டமிட்டுள்ள பகுதிகளில் எங்களது அதிகாரிகள் முதலில் ஆய்வு மேற்கொள்வார்கள். இந்த தகவல்கள் மென் பொருளில் பதிவேற்றம் செய்யப்படும். இந்த மென்பொருள் சிறந்த முறையில் போக்குவரத்து மாற்றம் செய்வதற்கான வழிமுறைகளை வழங்கும். இதன்படி எந்த வழியாக போக்குவரத்து மாற்றம் செய்தால் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் இருக்கும் என்பதை முடிவு செய்வோம்." இவ்வாறு அவர் கூறினார்.

# அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவராக ஆனிமேரி ஸ்வர்ணா பொறுப்பேற்பு



அரியலூர், மே. 23–

அரியலூர் மாவட்டத்தின் 16–வது ஆட்சித்தலைவராக, ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 22–ம் தேதி காலையில் பொறுப்பேற்றுக் கொண்டார். புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவருக்கு, அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,

2005 ஆம் ஆண்டு குருப்–1 தேர்வில் வெற்றிபெற்று, திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி வருவாய் கோட்டாட்சியராகவும், தொடர்ந்து கரூர் மாவட்டம், குளித்தலை வருவாய் கோட்டாட்சியராகவும் பணியாற்றி, பதவி உயர்வு பெற்று மருத்துவ பணிகள் தேர்வு வாரிய உறுப்பினர் செயலாளராகவும், டாஸ்கோ மற்றும் சிட்கோ பொதுமேலாளராகவும், பள்ளிக் கல்வித்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை துணை மற்றும் இணை செயலாளராகவும் பணியாற்றி, தற்போது அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்றுள்ளேன்.

அரியலூர் மாவட்ட வளர்ச்சிக்காக வேளாண்மை, கல்வி மற்றும் அடிப்படை வசதிகளான குடிநீர், இருப்பிடம், உள்கட்டமைப்பு, பொது சுகாதாரம் ஆகியவைகளுக்கு முக்கியத்தும் வழங்கி, மக்கள் நலனுக்காக தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அனைத்தும், அனைவருக்கும் தங்குதடையின்றி தகுதியுடைய நபர்களுக்கு சென்றடைய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா தெரிவித்தார்.

# தனியார் பள்ளிகளில் இலவச மாணவர் சேர்க்கை 50000 இடங்கள் குறைப்பு, பெற்றோர்கள் அதிர்ச்சி

புதுக்கோட்டை, மே.23–

மாணவர் சேர்க்கை கூடுதல் இடங்கள் ஒதுக்க வேண்டி புதுக்கோட்டை மாவட்ட தனியார் பள்ளிகள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரமணன் அறிக்கை விடுத்துள்ளார். கட்டாய கல்விஉரிமைச்சட்டப்படி சிறுபான்மையற்ற தனியார் பள்ளிகளின் கல்வி பயிலும் மாணவர் சேர்க்கையில் 25 சதவிதம் இடங்களை இலவசமாக பள்ளி நிறுவனங்கள் ஒதுக்கீடு செய்து வருகின்றனர் .இவ்வகை மாணவர்களுக்கு தமிழக அரசு மத்திய அரசுடன் இணைந்து கல்விகட்டணத்தை பள்ளிகளுக்கு வழங்கி வருகிறது. சமுதாயத்தில் நலிவடைந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட நிலையில் உள்ள பெற்றோர்களின் குழந்தைகளும் தனியார் பள்ளிகளில் கல்வி பயில விரும்பும் போது அவர்களுக்கு வாய்ப்புகளை அரசு ஏற்படுத்தி கொடுத்து வருகிறது, பள்ளியிலிருந்து சுமார் 1கிலோமீட்டர் தொலைவுக்குள் இருப்பிடம் உள்ள மாணவர்களுக்கு இவ்வாய்ப்பு வழங்க பட்டு வருகிறது .

கடந்த கல்வி ஆண்டுகளில் ஓவ்வொரு பள்ளிக்கும் குறைந்த பட்ச சேர்க்கை ஒதுக்கீடு இடங்கள் எட்டு ஆகும். தற்போது இக்கல்வி ஆண்டில் இவ்வகை நடைமுறை மாற்றப்பட்டு குறைந்த பட்சம் இடம் ஒன்றாக குறைக்கப்பட்டுள்ளது. இது பெற்றோர்கள் மற்றும் தாளாளர்கள் மத்தியில் பெறும் அதிர்ச்சிபை உண்டாக்கி இருக்கிறது .சென்றகல்வி ஆண்டை விட சுமார் ஐம்பதாயிரம் இடங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

இக்கல்வி ஆண்டில் சுமார் 80000 மாணவர்களுக்கு மட்டுமே இடங்களை ஓதுக்க அரசு முடிவு செய்துள்ளது ஆனால் பெற்றோர்கள் 135000 பேர் தனியார் பள்ளிகளில் தங்கள் குழந்தைகள் பயில ஆன்லைன் மூலம் விண்ணப்பித்துள்ளனர். ஓதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்கு கூடுதலாக பெற்றோர்கள் விண்ணப்பம் செய்து இருந்தால் அவ்வகை மாணவர்கள் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப் படுவார்கள் . இந்நிலையில் தேர்வு செய்ய இயலாத மாணவர்களுக்கு இது மிக பெரிய ஏமாற்றமாக இருக்கும். கல்வி கனவு பறிபோகும்.

பள்ளிதாளாளர்களை பொறுத்தவரை இலவச சேர்க்கை இடங்களில் சேரும் மாணவர்களின் கல்வி கட்டணத்தை அரசு ஒவ்வொரு ஆண்டும் அக்கல்வி ஆண்டு முடிவதற்குள் பள்ளிகளுக்கு வழங்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். தற்போது பள்ளி சீருடை மற்றும் புத்தக செலவை இவ்வகை மாணவர்களுக்கு அரசே ஏற்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து உள்ளது. அனைத்து சூழலையும் கருத்தில் கொண்டு அரசு இதில் சிறப்பு கவனம்செலுத்தி கூடுதல் இடங்களை ஏற்படுத்த வேண்டும். .இதனையே சமுக ஆர்வலர்கள் கல்வியாளர்கள் மற்றும் பெற்றோர்களும் வலியுறுத்தி வருகின்றார்கள். மாணவர்கள் எதிர்கால நலன்கருதி உடனே அரசு நல்ல முடிவை எடுக்க வேண்டும்.

# புதுவை சட்டப்பேரவை மதிப்பீட்டு குழுவின் சேர்மேன் நாஜிம் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை





காரைக்கால், மே,23

புதுவை சட்டப்பேரவை மதிப்பீட்டு குழுவின் சேர்மேன் நாஜிம் தலைமையிலான இக்குழு நேற்று மதகடியில் அமைந்துள்ள பெருந்தலைவர்காமராஜர் நிர்வாக வளாகத்தில் ஆலோசனைக் கூட்டம். நடைபெற்றது.

இந்நிகழ்வில் சட்டமன்றஉறுப்பினர்கள் கல்யாணசுந்தரம், ஆறுமுகம், விவியன் ரிச்சர்ட்ஸ், வைத்தியநாதன், சிவசங்கரன், நாகதியாகராஜன், சம்பத், இராமலிங்கம் ஆகியோரும் மற்றும் அரசு செயலர் (சுகாதாரத்துறை) உதயகுமார் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் ராகேஷ் அகர்வால், இயக்குநர். ஜிப்மர் மற்றும் ஸ்ரீராமுலு, இயக்குநர் சுகாதாரத்துறை, (D,M.S) சட்டப்பேரவை செயலர் தயாளன் மற்றும் ஜிப்மர் அரசு அதிகாரிகள், சுகாதாரத்துறை மற்றும் நலவழித்துறை அரசு அதிகாரிகள், பொதுப்பணித்துறை அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தின் முக்கிய நோக்கம் காரைக்காலில் சுகாதாரத்துறையை மேம்படுத்துவது தான் என்றும் இந்த அறிக்கை அரசிடம்சமர்பிக்கப்படும் என நாஜிம் தெரிவித்தார். மேலும் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள பனியிடங்களை நிரப்ப அதிகாரிகளுக்கு பரிந்துரைத்தார். குறிப்பாக சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள். மற்றும் வார்டுஅட்டன்டர்மற்றும் சேனிட்டரி அட்டன்டர் பனியிடங்களை நிரப்புவதற்கு ஆலோசித்தார். ஆயுஷ்மான் பார்த் திட்டத்தின் மூலம் வரும் நோயாளிகளுக்கு மருத்துவ உதவி அளிக்க இக்கமிட்டி அதிகாரிகளிடம் கூறினார்கள்.

நோயாளிகளுக்கு ஆம்புலன்ஸ் மூலம் அவசர உதவிக்கு மேல் சிகிச்சைக்காக புதுவைக்கும் அருகில் உள்ள மாவட்ட மருத்துவமனைக்கும் செல்வதற்கு தொய்வில்லாமல் செயல்படுத்துமாறும் கூறினார்கள், அரசு மருத்துவமனையில் இயங்கும் டயாலிசிஸ் யூனிட்டை மேம்படுத்த கோரினார்கள். M.R.I. ஸ்கேன் காரைக்காலில் அமைப்பதற்கு ஆவன செய்யும்படியும் கேட்டுக்கொண்டார்கள்.

மேலும் ஜிப்மர் நிர்வாகம் மூலம் அரசு பொது மருத்துவமனை காரைக்காலுக்கு ஒதுக்கப்பட்ட 30 கோடிக்கான பணியை விரைந்து முடிக்கும் படியும் சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டார்கள். மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் அரசு பொதுமருத்துவமனைக்கு கூடுதல் ஆம்புலன்ஸ் சேவை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்கள். மேலும் அரசு பொது மருத்துவமனை மற்றும் தற்போது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜிப்மர் ஆகிய இடங்களை இக்குழுவினர் ஆய்வு மேற்கொண்டார்கள்.

# காரைக்கால் நகரில் உணவு பாதுகாப்பு துறை வண்டிகளில் விற்பனை செய்யக்கூடிய மாம்பழங்களை ஆய்வு செய்தனர்



காரைக்கால் , மே,23

காரைக்கால் உணவு பாதுகாப்பு துறை காரைக்கால் நகரில் உள்ள , நேரு மார்க்கெட் மற்றும் தள்ளு வண்டிகளில் விற்பனை செய்யக்கூடிய மாம்பழங்களை ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்போது மாம்பழங்கள் செயற்கையான முறையில் பழுக்கவைக்கப்படுகிறதா ரசாயன கலவை மற்றும் கார்பரேட் கற்கள் கொண்டு பழுக்க வைக்கப்படுகிறதா என்பதை சோதிக்கும் பொருட்டு பல கடைகளில் இருந்தும் தள்ளு வண்டிகளில் இருந்தும் மாம்பழங்களை மாதிரிக்காக சேகரிக்கப்பட்ட புதுவையில் உள்ள அரசு பரிசோதனை சாலைக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

ஆய்வின் முடிவில் கிடைக்கப்பெறும் அறிக்கை குறித்து சட்ட ரீதியான நடவடிக்கைகளை தவறு செய்தவர்கள் மீது வழக்காக தொடுக்கப்படும்.

மேலும் நேரு மார்க்கெட்டில் பெண் வியாபாரி ஒருவர் செயற்கை பச்சை ரசாயனத்தில் ஊறவைத்த பட்டாணிகளை விற்பனை செய்ததை கண்டு பிடித்தனர். அவர் சட்டத்துக்கு புறம்பாக செயற்கை நிறம் ஏற்றி விற்கப்படுவதை தடுக்கும் பொருட்டு பட்டாணிகளை பறிமுதல் செய்து பரிசோதனை சாலைக்கு அனுப்பப்பட உள்ளது ஆய்வறிக்கையின் அடிப்படையில் அந்த பெண்மணி மீது குற்றவியல் வழக்கு தொடுக்கப்படும் மேலும் உரிமம் இல்லாமல் வியாபாரம் செய்ததுக்காகவும் கூடுதலாக வழக்கு பதியப்படும் மேலும் நேரு மார்க்கெட்டில் உள்ள அனைத்து வியாபாரிகளுக்கும் விரைவாக உணவு உரிமம் எடுக்க சொல்லி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# கும்மிடிப்பூண்டி அருகே சாலை விபத்து இலங்கை மறுவாழ்வு முகாமை சேர்ந்த 3 பேர் பலி



ஊத்துக்கோட்டை, மே23-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி அடுத்த பெத்திகுப்பம் ஊராட்சியில் இலங்கை மறுவாழ்வு முகாம் உள்ளது.

இந்த முகாமில் 927 குடும்பங்கள் வசித்து வருகின்றது.இங்கு கடந்த வாரம் அரசு சார்ந்த உதவிகளை அந்தந்த குடும்பங்களுக்கும் உடனடியாக பெற்றுத் தரும் வகையில் இலங்கை மறுவாழ்வு முகாமிற்கு கும்மிடிப்பூண்டி வட்டாட்சியர் முன்னிலையில் தலைவர், செயலாளர்,பொருளாளர் என வாக்கு எண்ணிக்கை மூலம் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்நிலையில், பெத்திகுப்பம் மேம்பாலம் பகுதியில் இருசக்கர வாகனத்தில் லாரி மோதி 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதை அறிந்த சிப்காட் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மூன்று பேர் உடலை கைப்பற்றி பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த விபத்து குறித்து சிப்காட் போலீசார் வழக்கு பதிவு செய்து விபத்தில் உயிரிழந்த நபர்கள் குறித்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில் கும்மிடிப்பூண்டி இலங்கை மறுவாழ்வு முகாமைச் சேர்ந்த தயாளன்(19), சார்லஸ்(22), மதுரை இலங்கை மறுவாழ்வு முகாமை சேர்ந்த ஜான் (23) என்பதும் ஜான் தன்னுடைய உறவினர்கள் வீட்டிற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு வந்திருந்தார்.தற்போது விபத்தில்சிக்கிபலியானார் என்பதும் தெரியவந்தது. விசாரணையில் உயிரிழந்த இலங்கை அகதிகள் முகமைச்சேர்ந்த இளைஞர்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து எளாவூர் பகுதிக்கு மூன்று பேர் ஒரே மோட்டார் சைக்கிளில் வீடியோ எடுத்துக்கொண்டு வேகமாக சென்றனர்.

அப்போதுமேம்பாலம் அருகே அதே திசையில் ஆந்திர மாநிலம் நோக்கிச் சென்ற டேங்கர் லாரியை முந்தி சென்றபோது நிலைத்தடுமாறி டேங்கர் லாரியில் மோதி தூக்கி வீசப்பட்டு உயிரிழந்தது தெரியவந்தது. வாலிபர்களை மோதிவிட்டு சென்ற டேங்கர் லாரியை போலீசார் எளாவூர், ஆரம்பாக்கம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளை வைத்து தீவிரமாக சோதனை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சாலை விபத்தால் கும்மிடிப்பூண்டி இலங்கை மறுவாழ்வு முகாமே சோகத்தில் மூழ்கியுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்பேரில் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆர் கே நகர் சட்டமன்ற தொகுதி 47 வது வார்டில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 32.5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நீத்தார் நினைவு கூடம் கட்டுவதற்காக நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது. நிகழ்வில் மண்டலகுழு தலைவர் நேதாஜி கணேசன் மாமன்ற உறுப்பினர் மணிமேகலை ஏழுமலை ,வட்ட செயலாளர் ஏழுமலை உள்ளிட்ட நிர்வாகிகள் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மாவட்டத்தில் விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான திருப்பட்டினம் மேலையூர் பகுதியில் எருக்கடி ஆலமரம் அருகில் விவசாய தேவைக்காக ரூபாய் 11,75,000/- (பதினோரு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம்) செலவில், நெற்களம் அமைக்கும் பணிக்கான பூமி பூஜையை சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் காரைக்கால் வட்டார வளர்ச்சி அதிகாரி சச்சிதானந்தம் மற்றும் விவசாயிகள், ஊர் பொதுமக்கள் மற்றும் வட்டார வளர்ச்சி துறை அதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.



ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்டத்தில் அதிகரித்து வரும் வெப்ப அலை தாக்கத்தால் ஏற்படும் பாதிப்புகள் அவற்றை எதிர்கொள்வது, அதற்காக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை க.லோகநாயகி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முரளி (பொறுப்பு), வருவாய் பேரிடர் மேலாண்மை பிரிவு வட்டாட்சியர் பாலாஜி மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்



சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் தமிழீழ இனப்படுகொலை 14 -ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் மதிமுக வைகோ, மே 17இயக்கம் திருமுருகன் காந்தி உடன் ஆவல் கணேசன் பங்கேற்பு

# விருதுநகரில் ஓய்வுபெற்ற கல்வித் துறை அதிகாரி உடலில் பெட்ரோல் ஊற்றி தீக்குளிக்க முயற்சி



விருதுநகர் , மே,23

கல்வித் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவர் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உடலில் பெட்ரோல் ஊற்றி நேற்று தீக்குளிக்க முயன்றார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க் கூட்டம் நடைபெற்றது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்கள் ஏராளமானோர் மாவட்ட ஆட்சியரிடம் மனுக்கொடுத்தனர். மனுக்கொடுக்க வரும் பொதுமக்கள் மற்றும் அவர்கள் கொண்டுவரும் உடமைகள் அனைத்தும் நுழைவாயில் பகுதியில் போலீஸாரால் சோதனை நடத்தப்பட்ட பின்னரே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படுவர்.

இந்நிலையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் வந்த முதியவர் ஒருவர் கேனில் கொண்டு வந்த பெட்ரோலை எடுத்து உடலில் ஊற்றித் தீக்குளிக்க முயன்றார். அருகிலிருந்தவர்கள் ஓடிச்சென்று பெட்ரோல் கேனைப் பறித்து முதியவரை மீட்டனர். இதைப் பார்த்து அங்கு பாதுகாப்புப் பணியிலிருந்த போலீஸார் முதியவரிடம் விசாரணை நடத்தினர். விசாரணையில், தற்கொலைக்கு முயன்றவர் சாத்தூர் அருகே உள்ள இருக்கன்குடியைச் சேர்ந்த சின்னதம்பி (78) என்பதும், சென்னையில் பள்ளிக் கல்வித்துறையில் மேற்பார்வையாளராக பணியாற்றி ஓய்வுபெற்றதும் தெரியவந்தது.

மேலும் சின்னதம்பி கூறுகையில், ”கடந்த 1983ல் சாத்தூரில் சொந்தமாக வீடு ஒன்று வாங்கினேன். தற்போது அந்த வீட்டில் வழக்கறிஞராக உள்ள மூத்த மகன் சிவகுமார் ஆக்கிரமித்துக்கொண்டு என்னை துரத்துகிறார். எனது வீட்டை மீட்டுத்தருமாறு வருவாய்த்துறை, காவல்துறையினரிடம் பலமுறை மனுக்கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால், மனமுடைந்த தற்கொலைக்கு முயன்றேன்” எனத் தெரிவித்தார். அதையடுத்து, சூலக்கரை காவல் நிலையத்திற்கு சின்னதம்பியை போலீஸார் அழைத்துச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தருமை ஆதீனம் முன்னிலையில் நடைபெற்ற

# சீர்காழி சட்டைநாதர் சுவாமி கோயிலில் பரிவார கோவில்களுக்கு கும்பாபிஷேகம்: உயர் நீதிமன்ற நீதியரசர் பங்கேற்பு



சீர்காழி , மே,23

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தருமபுரம் ஆதீனத்திற்கு உட்பட்ட சட்டைநாதர்சுவாமி கோயில் உள்ளது. திருநிலைநாயகிஅம்பாள் உடனாகிய பிரம்மபுரீஸ்வரர் சுவாமி அருள்பாலிக்கிறார். இங்கு சிவபெருமான் மூன்று நிலைகளில் காட்சிதருகிறார். பிரசித்திப்பெற்ற இக்கோயிலில் வரும் 8 கால யாகசாலை பூஜைகளில் தொடங்கி நடைபெற்றுவருகிறது, இன்நிலையில் பரிவார மூர்த்திகள் கும்பாபிஷேகம் இன்று நடைபெற்றது.

இதில் ஆபத்து காத்த விநாயகர், சம்கார வேலவர், அஷ்ட பைரவர், ருணம் தீர்த்த விநாயகர், காளிபுரிஸ்வரர், கணநாதர், மண்டபம் குமாரர், தேவேந்திர லிங்கம் உள்ளிட்ட பரிவார கோவில்களுக்கு மகா கும்பாபிஷேகம் தருமை ஆதினம் 27வது குருமாக சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் ஞானசம்பத பரமாச்சாரியர் சுவாமிகள் முன்னிலையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது, இதில் உயர் நீதிமன்ற நீதியரசர் மகாதேவன் பங்கேற்று பரிவார கும்பாபிஷேகதை கண்டு களித்தனர். இந்த பரிவார கோவில்களின் கும்பாபிஷேகத்தில் திராளன பக்தர்கள் பங்கேற்று கும்பாபிஷேகத்தை கண்டுகளித்தனர்.



சென்னை பிரஸ் கிளப் உறுப்பினரும், தமிழ்நாடு மூத்த பத்திரிகையாளர் பேரவையின் தலைவருமான ஜனசக்தி இதழாளர் இசைக்கும் மணி 74 வது அகவை தினத்தை முன்னிட்டு அவரை சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, சென்னை பிரஸ் கிளப் சார்பில் உழைக்கும் மூத்த பத்திரிகையாளர்களை கௌரவிக்கும் விதமாகவும், 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஊடகத் துறையில் பணியாற்றுபவர்களை சிறப்பிக்கும் விதமாகவும் நிர்வாகிகள் அவருக்கு சந்தன மாலை அணிவித்தனர்.மேலும் சென்னை பிரஸ் கிளப் சார்பில் 50 ஆம் ஆண்டின் நினைவு பரிசும் வழங்கப்பட்டது. மேலும் மூத்த பத்திரிகையாளர்கள் இசைக்கும் மணி மற்றும் சிந்து பாஸ்கர் ஆகியோர்களுக்கு இவ்வாண்டிற்கான சென்னை பிரஸ் கிளப் அடையாள அட்டையும் வழங்கப்பட்டது. நிகழ்வின் போது ஏற்புரை ஆற்றிய தமிழ்நாடு மூத்த பத்திரிகையாளர் பேரவையின் ஒருங்கிணைப்பாளரான சிந்து பாஸ்கர் கூறுகையில், "இளம் இதழியலாளர்கள் முதல் மூத்த பத்திரிகையாளர்கள் வரை அனைவரின் நலனுக்காகவும் தொடர்ந்து பாடுபட்டு வரும் சென்னை பிரஸ் கிளப் உடன் தமிழ்நாடு மூத்த பத்திரிகையாளர் பேரவையும் பத்திரிகையாளர்களின் நலன் காக்க இணைந்து பணியாற்றும்" என உறுதியளித்தார்

## கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில்

# பாதிரிவேடு பஸ் நிலையம் அருகே தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம்



ஊத்துக்கோட்டை,மே23-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கி தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் பாதிரிவேடு பஸ் நிலையம் அருகே நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் தலைமை தாங்கினார். அனைவரையும் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆ , சந்திரமோகன் வரவேற்றார். ஒன்றிய செயலாளர் மு.மணிபாலன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் பா.சே. குணசேகர்,பி.வெங்கடாஜலபதி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மோகன்பாபு, கே.வி.லோகேஷ், வே.ஆனந்தகுமார், பாதிரிவேடு வி.வாசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், திமுக கொள்கை பரப்பு இணைச் செயலாளரும்,தலைமை கழகப் பேச்சாளருமான ஈரோடு இறைவன் கலந்து கொண்டு இரண்டு ஆண்டு திராவிட மாடல் ஆட்சியின் சிறப்புகளை எடுத்துக் கூறி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், கே.வி. ஜி.உமாமகேஸ்வரி,பி. ஜே.மூர்த்தி, எஸ்.ரமேஷ்,கு. ஜோதிலிங்கம், டி.மஸ்தான், எம்.கே.ஏசுரத்தினம், மீனவர் அணி கே.ஆறுமுகம் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முடிவில், சிவஇளங்கோ, மகேந்திரன், கருணாகரன் ஆகியோர் நன்றி கூறினர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றிய திமுக இளைஞர் அணியினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# மாரடைப்பால் பலியான காவலர் ஏகாம்பரம் குடும்பத்துக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சி ஊத்துக்கோட்டையில் நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, மே23-

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் கூனிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த ஏகாம்பரம் என்பவர் பணியாற்றி வந்தார்.சில நாட்களுக்கு முன்னர் இவர் மாரடைப்பால் பலியானார். இவர் 2013-ம் ஆண்டு பேட்ச் காவலர் ஆவார்.

இந்நிலையில்,2013-ம் ஆண்டு பேட்ச் காவலர்கள் ஒன்றிணைந்து ஏகாம்பரம் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்க முடிவு செய்தனர். இந்த வகையில் ரூ.14,52, 000-சேர்ந்தது.இதில், ஏகாம்பரத்தில் இரண்டு குழந்தைகளுக்கு தலை ரூ.ஆறரை லட்சம் வீதம் பத்து ஆண்டுகளுக்கு பின்னர் பல மடங்கு தொகை பெறும் வகையில் வங்கியில் டெபாசிட் செய்யப்பட்டது.

மீதி ரொக்க பணத்தை ஏகாம்பரத்தின் மனைவி மற்றும் தாயாரிடம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஊத்துக்கோட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு ஊத்துக்கோட்டை காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் சத்யாபாமா தலைமை தாங்கினார்.

காவலரின் குடும்பத்திற்கு காவலர்களின் சார்பாக ஊத்துக்கோட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு கணேஷ்குமார் உதவித்தொகை மற்றும் குழந்தைகளின் பெயரில் டெபாசிட் செய்யப்பட்ட சான்றிதழ் ஆகியவற்றை வழங்கி ஆறுதல் கூறினார்.முடிவில்,முதல் நிலைக்காவலர் ராஜி நன்றி கூறினார்.

# ஊட்டியில் நடைபெறும் சுற்றுலா பயிற்சி முகாமில் பங்கேற்க புதுக்கோட்டையில் இருந்து மாணவர்கள் பயணம்



புதுக்கோட்டை , மே.23-

பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் ஊட்டியில் வருகிற 27-ந்தேதி வரை அரசுப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கான சுற்றுலா பயிற்சி முகாம் நடைபெறுகிறது அதில் பங்கேற்க புதுக்கோட்டையில் இருந்து சென்ற மாணவ, மாணவிகளின் பேருந்தினை மாவட்ட முத்மைக்கல்வி அலுவலர் மஞ்சுளா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் மே 23 ந்தேதி (செவ்வாய்கிழமை) முதல் வருகிற 27- ந்தேதி( சனிக்கிழமை) வரை ஊட்டியில் அரசுப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கான புதியன விரும்பு கோடைக் கொண்டாட்டம் சுற்றுலாப் பயிற்சி முகாம் நடைபெற இருக்கிறது. இதில் புதுக்கோட்டையில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 6 மாணவ, மாணவிகள் மற்றும் 2 பொறுப்பாசிரியர்கள் சென்ற பேருந்தினை முதன்மைக்கல்வி அலுவலக வளாகத்தில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மஞ்சுளா நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள் முருகையன் ( மேல்நிலை), ராஜூ ( உயர்நிலை), உதவித்திட்ட அலுவலர்கள் சுதந்திரன், தங்கமணி ( தொடக்கக்கல்வி பொறுப்பு) அருள்மிகு பிரகதம்பாள் அரசு மேல்நிலைப் பள்ளியின் தலைமை யாசிரியர் ராஜேந்திரன், மாதிரி பள்ளியின் தலைமை யாசிரியர்( பொறுப்பு) பாண்டியன், பள்ளித்துணை ஆய்வாளர் கி.வேலுச்சாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதுக்கோட்டையில் இருந்து 6 மாணவ, மாணவிகள் மற்றும் 2 பொறுப்பா சிரியர்களுடன் செல்லும் பேருந்து சிவகங்கையில் 6 மாணவ, மாணவிகளையும், மதுரையில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த 21 மாணவ, மாணவிகள் மற்றும் இராமநாதபுரத்தைச் சேர்ந்த 1 மாணவர் ஆகியோர் சென்றுள்ளனர். பயிற்சி முகாமில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தி தந்த தமிழக முதல்வர், கல்வி அமைச்சர், கல்வித்துறை உயர் அலுவலர்களுக்கும் புதுக்கோட்டை மாணவ, மாணவிகள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# புதுக்கோட்டையில் மாணவர்களுக்கு சிலம்பு பயிற்சி முகாம் நிறைவு நற்சான்றிதழ் வழங்கும் விழா



புதுக்கோட்டை, மே.23-

புதுக்கோட்டை புத்தாஸ் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அறக்கட்டளை, சார்பாக நடைபெற்ற கோடைகால சிலம்ப பயிற்சி முகாம் நிறைவு விழா நியூ மோடி போர்ட் பேட்மிண்டன் கிளப்பில் நடைபெற்றது, பயிற்சி முகாம் 10.5.2023 முதல் 21.5.2023 வரை நகர்மன்ற வளாகத்தில் நடைபெற்றது 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர், பயிற்சி முகாமில் சிலம்பம் பயிற்சி, குழந்தைகள் தற்காப்பு பயிற்சி, சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த பயிற்சிகளும் வழங்கப்பட்டது.

நிறைவு விழா நிகழ்ச்சி நியூ மோடி போர்ட் பேட்மிண்டன் கிளப்பில் , நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், தலைமையில் நடைபெற்றது சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத் தலைவர், மாருதி கண.மோகன்ராஜ் புத்தாஸ் வீரக்கலைக் கழகத்தலைவர் ரமேஷ் முன்னிலை வகித்தனர், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட 100க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கிபேசினார். அவர் பேசும்போது

தமிழக முதல்வர் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர், சிலம்பத்திற்கு, மட்டுமின்றி அனைத்து விளையாட்டுகளுக்கும் மிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள் இதனால் பள்ளி கல்வித்துறையிலும் உயர்கல்வி துறையிலும் கலைத் திருவிழாக்கள் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது, மேலும் சீருடை பணியாளர் தேர்வு, மற்றும் அரசு பணி தேர்வுகளில் விளையாட்டு இட ஒதுக்கீடுகளுக்கு உரிய தனி மதிப்பெண்கள் வழங்கப்பட்டு வருகிறது, எனவே இன்றைய இளைய தலைமுறை மாணவச் செல்வங்கள் இதனை நன்கு மனதில் கொண்டு, தொலைக்காட்சி, தொலைபேசி ஆகியவற்றிலிருந்து விடுபட்டு, இது போன்ற விளையாட்டுகளை கற்று உடல் ஆரோக்கியத்திலும், மன ஆரோக்கியத்திலும், அரசு தரும் பல்வேறு நலத்திட்டங்களையும் பெற்று பயனடைய வேண்டுமாய் கேட்டுக் கொண்டார் திலகவதியார் திருவருள் ஆதீன கர்த்தா தயானந்த சந்திரசேகரன் சுவாமிகள்.

புதுக்கோட்டை மாவட்ட இறகு பந்து கழக செயலாளர் குமார், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்க செயலாளர் இப்ராஹிம் பாபு, நியூ மோடி பேட்மிண்டன் கிளப் நிர்வாகிகள், .சேகர் ,ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள், முன்னதாக வருகை தந்த அனைவரையும் புத்தாஸ் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு முன்னதாக அறக்கட்டளையின் தலைவர் , சேது கார்த்திகேயன் வரவேற்றார் புத்தாஸ் வீரக்கலைக் கழகத்தின் பொருளாளர், பார்த்திபன் நன்றி கூறினார் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மேற்கொண்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஸ்ரீநகரில் ஜி20 சுற்றுலா பணிக்குழு கூட்டம்

# பல்வேறு நாடுகளில் இருந்து ஏராளமானோர் பங்கேற்பு



ஸ்ரீநகர் , மே.23-

ஜம்மு காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் 3 நாட்களுக்கு நடைபெறும் மூன்றாவது ஜி20 சுற்றுலா பணிக்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக பல்வேறு நாடுகளில் இருந்தும் பங்கேற்பாளர்கள் வருகை தந்துள்ளனர்.

ஜி20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுள்ள நிலையில், சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் ஜி20 சுற்றுலா பணிக்குழு கூட்டம் ஸ்ரீநகரில் நேற்று தொடங்கியது. மூன்று நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக ஜி20 உறுப்பு நாடுகள், அழைப்பு நாடுகள், சர்வதேச அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஸ்ரீநகருக்கு வருகை தந்துள்ளனர்.

ஸ்ரீநகரில் உள்ள ஷெர் இ காஷ்மீர் சர்வதேச மாநாட்டு மையத்தில் இந்த கூட்டம் நடைபெற உள்ளது. பொருளாதார வளர்ச்சிமற்றும்கலாச்சார பாதுகாப்புக்கான திரைப்பட சுற்றுலா எனும் கருப்பொருளில் நடைபெறும் முதல் அமர்வில் பங்கேற்பதற்காக ஸ்ரீநகர் வருகை தந்துள்ள நடிகர் ராம்சரண், "சுற்றுலாவுக்கு மிகச் சிறந்த இடம் காஷ்மீர். 1986ம் ஆண்டில் இருந்து நான் இங்கு வந்து கொண்டிருக்கிறேன். இங்குள்ள குல்மார்க், சோனாமார்க் பகுதிகளில் நடைபெற்ற ஏராளமான படப்பிடிப்புகளில் எனது தந்தை பங்கேற்றுள்ளார். 2016ல் இந்த அரங்கில் நான் நடித்துள்ளேன். ஒவ்வொருவரையும் ஈர்க்கக்கூடிய இடம் காஷ்மீர்" என தெரிவித்தார்.

"திரைப்படப் படப்பிடிப்புக்கு காஷ்மீரை விட சிறந்த இடம் வேறு இருக்க முடியாது. காஷ்மீரின் எந்த ஒரு பகுதியிலும் படப்பிடிப்பு நடத்த தேவையான அனைத்து உதவிகளையும் நாங்கள் வழங்க உள்ளோம்" என நிதி ஆயோக் அமைப்பின் முன்னாள் தலைமை செயல் அதிகாரியும், அரசு பிரதிநிதியுமான அமிதாப் காந்த் தெரிவித்துள்ளார்.

"ஜி20 கூட்டத்தை காஷ்மீரில் நடத்துவதன் மூலம், நாம் அனைவரும் ஒன்றே என்ற உணர்வை இங்குள்ள மக்கள் பெறுவார்கள். இந்த நிகழ்ச்சியை இங்கு நடத்துவதன் மூலம், படப்பிடிப்புகளை நடத்துவதற்கு காஷ்மீர் பாதுகாப்பான இடம் என்ற செய்தி அனைவரையும் சென்று சேரும்" என தனியார் டிராவல்ஸ் நிறுவனத்தின் தலைவரான அபிஜீத் பாடில் தெரிவித்துள்ளார். "காஷ்மீருக்கு இது மிகச்சிறந்த நாள். உலகின் அனைத்து பகுதிகளில் இருந்தும் மக்கள் இன்று காஷ்மீர் வந்துள்ளனர். சுற்றுலாவுக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்" என ஸ்ரீநகரில் உணவகம் நடத்தி வரும் முஷ்டக் சாயா என்பவர் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் சட்டப்பிரிவு 370 கடந்த 2019ம் ஆண்டு ரத்து செய்யப்பட்டதற்குப் பிறகு அந்த யூனியன் பிரதேசத்தில் நடைபெறும் முதல் சர்வதேச நிகழ்வு இது என்பதால், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஸ்ரீநகரில் உள்ள விமான விமான நிலையம் முதல், மாநாட்டு அரங்கம் வரை போலீசாரும் ராணுவத்தினரும் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மாநாட்டு அரங்கத்திற்குள் வெளியாட்கள் நுழைய முடியாதபடி பாதுகாப்பும் கட்டுப்பாடுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

# பூரண மதுவிலக்கை அமல்படுத்த கோரி அரியலூரில் தமாகா கையெழுத்து இயக்கம்



அரியலூர்,மே.23-

பூரண மதுவிலக்கை அமல்படுத்த கோரி அரியலூரில் தமாகா சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது

தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்த கோரியும், சட்ட விரோத கள்ள சாராயம், போதை பொருட்கள் விற்பனை செய்ய தடை விதிக்க கோரியும், தமிழக அரசை வலியுறுத்தி, அரியலூர் மாவட்ட தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் இளைஞரணி சார்பில், மாவட்ட அளவில் பொதுமக்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது.

அவற்றை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவர் எஸ்.ஆர்.எம். குமார் தலைமையில், இளைஞர் அணி மாநில துணைத்தலைவர் மனோஜ், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் குரு கார்த்திகேயன், கடுகூர் கோவிந்தசாமி, கருப்பையன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலரும், அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர் நாள் முகாமுக்கு வந்து, மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினார்கள்.

# திருமயத்தில் காரும் பைக்கும் மோதிக்கொண்டதில் 3 கல்லூரி மாணவர்கள் படுகாயம்



திருமயம்,மே.23-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் காரைக்குடியில் இருந்து புதுக்கோட்டை செல்லும் பைபாஸ் சாலையில் கார்-பைக் மோதியதில் மூன்று கல்லூரி மாணவர்கள் படுகாயம் அடைந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே உள்ள செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரியில் படிப்பவர்கள், மனோஜ் குமார் (17 ) சொக்கலிங்கபுதூர், ஆதிசேஷன் ( 17) முத்தூர், கிருஷ்ணன் (18) பட்டமங்கலம், இவர்கள் மூவரும் கல்லூரி முடித்துவிட்டு திருமயத்தில் புதுக்கோட்டையில் இருந்து காரைக்குடி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருக்கும் பொழுது எதிர்பாராத விதமாக எதிரே வந்த கார் மோதியதில் மூவருக்கும் பலத்த காயம் அடைந்தனர், .இதில் மனோஜ், ஆதிசேஷன் கால் நசுங்கியது.

இந்நிலையில் உடனே அருகில் இருந்தவர்கள் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அருகில் உள்ள திருமயம் அரசு அண்ணா மருத்துவமனையில் சேர்த்தனர், இதில் கிருஷ்ணன் என்பவர் திருமயம் அரசு மருத்துவமனையிலும், மனோஜ் குமார், அல் சேஷன் , காரைக்குடியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர், எனவே பகுதியில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டுள்ளது, தகவல் இருந்து வந்த திருமயம் காவல்துறையினர் வழக்கு பதிந்து விசாரணை செய்து வருகின்றனர்.

# எஸ் டி வகுப்பு சாதி சான்றிதழ் வழங்க கோரி அரியலூரில் இந்து கணிக்கர்கள் சார்பில் மனு

அரியலூர், மே.23-

எஸ் டி வகுப்பு சாதி சான்றிதழ் வழங்க கோரி, அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், இந்து கணிக்கர்கள் சார்பில், கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது.

இது பற்றி அரியலூர் ரயில்வேஸ்டேஷன்ரோடு பகுதியில் வசிக்கும், இந்து கணிக்கர்கள் சமூகத்தை சேர்ந்த குப்புசாமி மகன் செல்வராஜ், மற்றும் அவரது சமூகத்தை சேர்ந்த பலரும், வக்கீல் சுகுமார் உதவியுடன், அரியலூர் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது:

அரியலூர்மாவட்டம், அரியலூர் வடக்கு எடுத்துக்காரன்பட்டி கிராமத்தில், சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக, இந்து கணிக்கர் (எஸ் டி) சமூகத்தை சேர்ந்த 40 குடும்பங்களில், சுமார் 450 பேர் வசித்து வருகிறோம். எங்களது சமூகத்தை சேர்ந்த 25 ஆண் பிள்ளைகளும், 25 பெண் பிள்ளைகளும், அரியலூர் ஆர்.சி .நிர்மலா காந்தி பள்ளியில் படித்து வருகின்றனர். இவர்களின் மேற்படிப்புக்காக நாங்கள் கடந்த 2014-ம் ஆண்டு முதல், அரியலூர் சார் ஆட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட பலரிடமும், மனு கொடுத்து வருகிறோம். ஆனால் இன்று வரை உரிய நடவடிக்கை இல்லை.

எங்கள் சமூகத்தை சார்ந்தவர்களுக்கு, மதுரை, காஞ்சிபுரம், ராமநாதபுரம், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில், இந்து கணிக்கர் எஸ்.டி என சான்று வழங்கி உள்ளனர். அதை அடிப்படையாகக் கொண்டு, அரியலூரில் வசித்து வரும் எங்களுடைய குழந்தைகளின் கல்வி எதிர்காலத்தையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த, உடனடியாக இந்து கணிக்கர் (எஸ் டி) என சான்று வழங்க, நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# "கள்ளச்சாராய விவகாரத்தில் புதுச்சேரி முதல்வரை பதவி நீக்கம் செய்ய அண்ணாமலை கோருவாரா?" நாராயணசாமி கேள்வி



காரைக்கால் , மே.23-

தமிழகத்தில் நிகழ்ந்த கள்ளச்சாராய உயிரிழப்பு விவகாரம் தொடர்பாக புதுச்சேரி முதல்வர், உள்துறை அமைச்சரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கோருவாரா என புதுச்சேரி முன்னாள் முதல்வர் வி.நாராயணசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

காரைக்காலில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறியது: ''கர்நாடக தேர்தல் முடிவும் நாட்டு மக்கள் மத்தியில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, பாஜக தேசியத் தலைவர் ஜே.பி.நட்டா ஆகியோரின் பிரச்சாரம் எதையும் மக்கள் ஏற்கவில்லை. இது தேசிய அளவில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்தும். பிரதமர் ஏற்கெனவே அறிவித்த பணமதிப்பிழப்பு நடவடிக்கையால் கருப்புப் பணம் ஒழியவில்லை. மறுமுறையாக தற்போது 2 ஆயிரம் நோட்டுகளை திரும்பப்பெற செய்துள்ள நடவடிக்கை முட்டாள்தனமானது. 2000 ரூபாய் நோட்டு வெளியிடும்போதே இது தவறானது என காங்கிரஸ் கட்சி சொன்னது. பின் விளைவுகள் குறித்து சிந்திக்காமல் எடுக்கும் முடிவு ஆபத்தை விளைவிக்கும்.

டெல்லி முதல்வர் கேஜ்ரிவால் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு உள்ள அதிகாரம் குறித்தும், குறிப்பாக அரசு அதிகாரிகளை நிர்வகிக்கும் அதிகாரம் டெல்லி அரசுக்குதான் உண்டு என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதற்கு எதிராக, டெல்லி அரசின் அதிகாரத்தை பறித்து தங்கள் கையில் வைத்துக் கொள்ளும் வகையில், மத்திய அரசு அவசர சட்டம் பிறப்பித்துள்ளது. இதன் மூலம் உச்சநீதிமன்றத்தை மோடி அரசு அவமதித்துள்ளது. இதை எதிர்த்து கேஜரிவால் மேல் முறையீடு செய்யும்போது, அவருக்கு ஆதரவாக தீர்ப்பு வரும் என உறுதியாக சொல்கிறேன்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் பொறுப்பு வகிக்கும் தமிழிசை சவுந்தரராஜன், இத்தீர்ப்பு புதுச்சேரிக்கு பொருந்தாது என்கிறார். இதன் மூலம் அவரின் அதிகார வெறியை உணர முடிகிறது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பு குறித்து விமர்சனம் செய்வதை அவர் நிறுத்திக்கொள்ள வேண்டும். அந்த தீர்ப்பின்படி அவர் நடந்து கொள்ள வேண்டும். அதே சமயம் இத்தீர்ப்பு மகிழ்ச்சியளிப்பதாக முதல்வர் என்.ரங்கசாமி கூறியுள்ளார். புதுச்சேரிக்கு பொறுப்பு ஆளுநராக மட்டுமே உள்ள தமிழிசை தெலங்கானாவுக்கு செல்லாமல் இங்கேயே உள்ளார். அங்கே யாரும் இவரை மதிப்பதில்லை. புதுச்சேரியில் முதல்வர், அமைச்சர்கள் ஏமாளிகளாக உள்ளனர் என்பதால் இங்கேயே இருக்கிறார்.

காரைக்காலில் 10-ம் வகுப்பு தேர்ச்சி விகிதம் குறைந்துள்ளது. கல்வித்துறை சீர்கெட்டுவிட்டது. இதுகுறித்து பாஜகவை சேர்ந்த கல்வி அமைச்சருக்கு கவலை இல்லை. புதுச்சேரியில் கள்ளச்சாராயம் பெருகிவிட்டது. தமிழகத்துக்கு இங்கிருந்துதான் மது சப்ளை செய்யப்படுகிறது. முதல்வர் ரங்கசாமியின் ஆட்சியில் முதல்வர் உள்ளிட்ட அதிகாரிகள் லஞ்சம் பெற்றுக் கொண்டு மதுக்கடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்துவிட்டனர். ரெஸ்டோ பார் என்கிற திட்டத்தில் உரிமம் வழங்குவதில் ஒவ்வொரு பாருக்கும் ரூ.10 லட்சம் முதல்வருக்கு கொடுக்கப்படுகிறது என நேரடியாக நான் குற்றம் சாட்டினேன். அது குறித்து பாஜக, என்.ஆர்.காங்கிரஸ் உள்ளிட்ட எந்தக் கட்சியும் வாய் திறக்கவில்லை.

புதுவையின் கலாசாரம் சீரழிந்துவிட்டது. கள்ளச்சாராய உயிரிழப்பு சம்பவம் தொடர்பாக தமிழகத்தில் 2 அமைச்சர்களை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை ஆளுநரிடம் மனு கொடுத்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக புதுச்சேரியை சேர்ந்த 2 பேரை கைது செய்துள்ளனர். புதுச்சேரியில்தான் கள்ளச்சாராயம் பெருகியுள்ளது. அதனால் அண்ணாமலைக்கு தைரியம் இருந்தால், கள்ளச்சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்றால் புதுச்சேரி முதல்வர், உள்துறை அமைச்சர் ஆகியோரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைப்பரா? இது ஊருக்கு மட்டுமே உபதேசம் செய்யும் பாஜகவின் இரட்டை வேடம். என்.ஆர்.காங்கிரஸ்- பாஜக கூட்டணி அரசை தூக்கி எறிகின்ற காலம் வெகு தூரத்தில் இல்லை" என்றார்.

புதுச்சேரி மாநில காங்கிரஸ் தலைவர் ஏ.வி.சுப்பிரமணியன், மக்களவை உறுப்பினர் வி.வைத்திலிங்கம், முன்னாள் அமைச்சர் ஆர்.கமலக்கண்ணன், காரைக்கால் மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஆ.பி. சந்திரமோகன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# அனைத்து அதிகாரிகளையும் ஒருங்கிணைத்து அரசு திட்டங்கள் செயல்படுத்தப்படும்: சிவகங்கை புதிய ஆட்சியர் ஆஷா அஜித்



சிவகங்கை , மே.23-

அனைத்து அதிகாரிகளையும் ஒருங்கிணைத்து அரசு திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்படும் என சிவகங்கை மாவட்ட புதிய ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்ட புதிய ஆட்சியராக ஆஷா அஜித் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் கேரள மாநிலம் கொல்லம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் கடந்த 2015-ம் ஆண்டு சிவில் சர்வீஸ் தேர்வில் தேர்வில் தேர்ச்சி பெற்று 2016-17-ம் ஆண்டு திண்டுக்கல் உதவி ஆட்சியாகவும் (பயிற்சி), 2017-19-ம் ஆண்டு சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சார்-ஆட்சியராகவும், 2019-ம் ஆண்டு சென்னை தலைமை செயலகத்தில் துணை செயலராகவும், 2022-ம் ஆண்டு நாகர்கோவில் மாநகராட்சி ஆணையராகவும் பணிபுரிந்தார்.

தொடர்ந்து சென்னை தொழில் வழிகாட்டி நிறுவன செயல் இயக்குநராகவும் பணிபுரிந்து வந்துள்ளார்.

இந்நிலையில் சிவகங்கை ஆட்சியராக ஆஷா அஜித் செய்தியாளர்களிடம் கூறியதாவது, "அனைத்து அதிகாரிகளையும் ஒருங்கிணைத்து அரசு திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை கொடுத்து குறைகள் தீர்க்கப்படும்.

மாவட்ட மக்களின் பொருளாதார, சமூக முன்னேற்றத்துக்கும், வேலைவாய்ப்பு அதிகரிக்கவும் முயற்சி எடுக்கப்படும். மக்கள் தங்களது குறைகளை நேரடியாகவும், ஆன்லைன், மொபைல் வழியாகவும் தெரிவிக்கலாம். கிராபைட் தொழிற்சாலையை மேம்படுத்த அரசிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும். சிப்காட் தொழிற்பூங்காவை செயல்பாட்டுக்கு கொண்டு வரவும், மத்திய நறுமண பூங்காவை முழுமையாக செயல்படவும் நடவடிக்கை எடுக்கப்படும். அரசு அறிவித்துள்ள காரைக்குடி டைடல் பூங்கா சிறப்பாக அமைக்கப்படும்." இவ்வாறு அவர் கூறினார். மாவட்ட வருவாய் அலுவலர் மணிவண்ணன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சிவராமன் உடனிருந்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.




# முதலீட்டாளர்கள் மாநாடு
## முதல்வர் ஸ்டாலின் இன்று வெளிநாடு பயணம்

# பாஜகவை தொடர்ந்து அதிமுகவும் திமுக குறித்து ஆளுநரிடம் மனு





# கள்ளச்சாராயம்: பாஜக தலைவருக்கு புதுவை முன்னாள் முதல்வர் கேள்வி

சென்னை / புதுக்கோட்டை | 23.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

23.05.2023 செவ்வாய்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்


**காயத்திரி தேவி** , ஜெய்ப்பூர் மகாராணி (பி.1920) (இ.2009)



**பாலா தம்பு** , இலங்கை இடதுசாரித் தொழிற்சங்கவாதி (பி.1922) (இ.2014)



**கோவெலமுடி ராகவேந்திர ராவ்** , இந்தியத் திரைப்பட இயக்குநர், திரைக்கதை ஆசிரியர் (பி.1942)



## இன்றைய நினைவு நாள்

**கம்பதாசன்** , தமிழகக் கவிஞர், எழுத்தாளர், திரைப்படப் பாடலாசிரியர் (பி.1916) (இ.1973)



**டி. ஏ. மதுரம்** , தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகை, பாடகி (பி.1918) (இ.1974)



**பா. ராமச்சந்திரன்** , கேரளாவின் எட்டாவது ஆளுநர், தமிழக அரசியல்வாதி (பி.1934) (இ.2011)



## உலக ஆமைகள் நாள்